மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# பூந்தழல் கவிதைத் தொகுப்பில் காணப்படும் தமிழ்மொழியின் சிறப்பு

# A View on the specialism of Tamil Langguage in the Tamil Poetic Book Ponthazhal

இரமினி பெருமாள்/ Ramini Perumal[1]
[1]Undergraduate Student, Faculty of Languages and Communication, Sultan Idris Education University
Corresponding Email: raminiperumal12@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

பூந்தழல் கவிதைத் தொகுப்பில் தமிழ் மொழியின் சிறப்புக் குறித்தொரு பார்வையே இந்த ஆய்வின் நோக்கமாகும். இந்தப் பூந்தழல் எனும் கவிதைத்தொகுப்பில் மொழி குறித்து சுமார் 18 கவிதைகள் இடம்பெற்றுள்ளது. இந்த ஆய்வு பண்புசார் அணுகுமுறையில் கையாளப்பட்டுள்ளது. இந்த ஆய்விற்குப் பூந்தழல் மரபு கவிதைத் தொகுப்பே முதல் நிலை தரவாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் கவிதைகளில் தமிழ்மொழியின் சிறப்புகள் கவிஞரால் பல இடங்களில் வெளிபடுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு இடத்திலும் தமிழ்மொழிக்குரிய சிறப்பை இந்த ஆய்வின் மூலம் அறிய முடிகிறது.
**கருச்சொற்கள்:** பூந்தழல், கவிதைத்தொகுப்பு, தமிழ்மொழி, சிறப்பு

**Abstract**

The purpose of this study is to have a look at the speciality of the Tamil language in today's time as seen in the collection of traditional poetry Poontazhal. About 18 poems about language are featured in this collection of traditional poetry called Poontazhal. It can be seen that the poet has also featured the excellence of the Tamil language in his words. This study has been handled in qualitative approach. For this study, Poontazhal traditional poetry collection has been used as primary data. In these poems, the excellence of Tamil language has been expressed by the poet at many places. Through this study we can know the excellence of Tamil language in every place.
**Keywords:** Speciality, Poonthazal, Traditional Poetry, Tamil Language

**முன்னுரை**

பூந்தழல் எனும் இந்தக் கவிதைத் தொகுப்பைப் படைத்தவர் மு. ஆசைத்தம்பி (ஆவலன்). பாடலாசிரியர் தம் கருத்துக்களை வெளிப்படுத்த கருவியாக அமைவது தமிழ்மொழி ஆகும். படைப்பாளி மொழி வழியாகத் தம் உணர்வுகளைப் பதிவு செய்கிறார். தான்பெற்ற உணர்ச்சிகளைப் பிறருக்கு உணர்த்துவதற்குச் சில உத்திகளைக் கையாளுகின்றார். இந்தக் கவிதைத் தொகுப்பில் கவிஞர் உணர்த்திய தமிழ் மொழியைப் பற்றிய சில கருத்துகளை இந்த ஆய்வுக்கட்டுரையில் பார்ப்போம். தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தக் கவிதை தொகுப்பில் மொழியைச் சார்ந்து பல கருத்துகள் கவிதைகளில் வெவ்வேறு பாடுபொருள்களில் பேசப்பட்டுள்ளன.

**தரவுப் பகுப்பாய்வு**

**தமிழ் மூத்த மொழி**

முதலில் தமிழ் மூத்த மொழி என்பக்.ச் சில கருத்துகளின் வழி சில கவிதைகளில் காணமுடிகிறது. கணினியில் தமிழ் என்ற கவிதையில் வரும் அடிகளாக,

எவ்வுலக மாந்தர்க்கும்
இச்சைதரும் மொழியாயும்
இவ்வுலகின் மூத்தமொழி
என்பதையும் நிறுவிடுக!
(பூந்தழல், பக். 2)

இவ்வடிகள் தோன்றுகின்றன. மற்ற மானிடர்களுக்கு நம் மொழி இச்சை மொழியாக இருந்தாலும் இந்த மண்ணில் மூத்தமொழியாகத் தோன்றியதும் தமிழ்மொழி என்பதை இந்தக் கவிதை வரிகள் உணர்த்துகின்றன. கவிஞர், தமிழ் நம் வாழ்வன்றோ! எனும் கவிதையில்,

“முத்தமிழ்தான் உலகத்தின் மூத்தமொழி பிறமொழிகள்
அத்தனையும் அருந்தமிழின் பின்வந்த மொழி“
(பூந்தழல் பக்.12)

இந்த வரிகளில் தமிழ் மூத்தமொழிதான் பிறமொழிகள் அனைத்தும் நம்முடைய அருமையான தமிழுக்குப் பிறகே வந்தவை என்பதைக் குறிப்பிட்டுள்ளார்.

அதோடு தமிழ் என்பது மூத்த மொழி நாம் என்றும் போற்ற வேண்டும் என்பதனை விண்ணமுதம் கவிதைத் தொகுப்பில் தற்காலம் வேண்டும் தமிழ் என்ற கவிதையில்,

கற்காலம் தொட்டுக் கனிவாய் பயன்படுத்தும்
முற்காலம் நாம்செய்த முன்வினையின் பயனாலே
பிற்காலம் வாழ்வதற்குப் பேணிடுவோம் நம்மினிய
தற்காலம் வேண்டும் தமிழ் !
(விண்ணமுதம், பக். 5)

இந்த வரிகளின் வழி கவிஞர் பழங்காலம் தொட்டு இருந்த நம் தமிழ்மொழி இன்றும் இனி என்றும் நமக்குத் தேவை. பிற்காலத்தில் நாம் வாழ தமிழ்மொழி மிகவும் முக்கியம் அதனை நாம் பேணிட வேண்டும் என்று கவிஞர் வலியுறுத்தியுள்ளார்.

அதே போல, பாரதிதாசன் தம் கவிதைகளில்,

தமிழுக்கு அமுதென்று பேர் - அந்த
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்
(பாரதிதாசன்)

தமிழ் மொழி அமுதான மொழி அந்த மொழி அவரின் உயிருக்கு நேராக அவர் கருதி எழுதியுள்ளார். மூத்த மொழியாக இருந்தாலும் அதுதான் நம் உயிருக்கு நிகர் என்று குறிப்பிட்டுள்ளார்.

**தமிழ்மொழியை படிப்பது கடப்பாடு**

தமிழ் கற்பது ஒவ்வொரு தமிழனின் கடப்பாடாகும். அந்தக் கடப்பாட்டிலிருந்து தப்பிக்கக்கூடாது. இதைதான் கவிஞர்கள்,

தாய்மொழி என்பது தாயின்மொழி - அது
தாயும் நீயும் பேசும்மொழி
ஆயிரம் மொழிகள் நீயறிந் தாலும்
ஆன்மா உணர்மொழி அந்தமொழி – அது
அன்னையின் கருவில் வந்தமொழி!

உன்னுடன் இணைந்தே பிறந்தமொழி – உன்
உள்ளமும், உணர்வும் புரிந்தமொழி
எண்ணியல் என்ன, மின்னியல் என்ன
எதையும் பயின்றிடச் சிறந்தமொழி – அது
இறைவன் உனக்கென வரைந்தமொழி!
(கவிஞர் செ. சீனி நைனா முகம்மது)

இந்த விருத்தத்தில் கவிஞர் தமிழ்மொழி நம் தாய்மொழி அதோடு ஆயிரம் மொழி ஒரு மனிதனுக்குத் தெரிந்தாலும் அன்னையின் கருவில் வந்த இந்த மொழியைக் கண்டிப்பாகக் கற்க வேண்டும். அதோடு அடுத்த விருத்தத்தில் தமிழ்மொழி நம்முடனே பிறந்த மொழி அது இறைவன் நமக்கு வரைந்த மொழி கண்டிப்பாகப் பயின்றிட வேண்டும் என்பதனைக் கவிஞர் வலியுறுத்துகிறார்.

பூந்தழல் கவிதைத் தொகுப்பிலோ கவிஞர், தமிழ்மொழி கற்பது நம் கடமை என்று பாடுகிறார்.

பிறமொழி கற்ப தெல்லாம்
பிழைப்பதற்(கு) என்றபோதும்,
அறமொழி தமிழும் கற்றல்
அனைவரின் கடமை ஆக்கின் !
(பூந்தழல் பக். 8)

இவ்வடிகள் யாவும் மற்ற மொழி அனைத்தும் நாம் கற்றுக் கொள்ளலாம் ஏன் என்றால் இந்த மண்ணில் பிழைக்க வேண்டும். ஆனால் அறமொழியான தமிழ்மொழியைக் கற்றுக் கொள்வது கடமை என்பதை உணர்த்துகிறது.

கவிஞர் ஆசைத்தம்பி தமிழனுக்கு ஒரு சொல் எனும் கவிதையில் மற்ற மொழிகளுக்கு முதன்மைசெய்தால் சொத்தாக இருக்கும் நம் தமிழ்ப் பள்ளி அழிவு காணும் என்பதை உணர்த்தும் வகையில்,

முத்தமிழ் கல்விக்(கு) இங்கு
முதன்மைசெய் யாது போனால்,
சொத்தெனெ நமக்கி ருக்கும்
சொற்றமிழ்ப் பள்ளி எல்லாம்
தத்தெடுப் பார்கள் இன்றித்
தடயமில் லாது போகும்!
மொத்தமும் போன பின்பு
முகவரி தமிழர்க்(கு) ஏது?
(பூந்தழல் பக். 9)

இந்த வரிகளில் கவிஞர் தமிழைக் கற்றுக் கொள்ளாமல் விட்டால் நம் தமிழ் பள்ளிகளைத் தத்தெடுத்து விடுவார்கள். இதனால் நம் தமிழருக்கு மொத்தமும் அழிந்துவிடும், முகவரி இல்லாமல் தமிழர்கள் இருப்பார்கள். தமிழ் மொழியைக் கண்டிப்பாக கற்க வேண்டும் என்று கவிஞர் உணர்த்துகிறார்.

**மொழியின் சிறப்புகள்**

தமிழ் மூத்த மொழியாக இருந்தாலும் அந்த பழமையான மொழியில் ஒவ்வொன்றுக்கும் சிறுப்புகளைக் காணலாம். கவிஞர் எழுத்துக்களை சிறப்புகளை அழகாக வருணித்து எழுதியுள்ளார்.

பிறமொழியில் ழகரஒலிச் சிறப்பில்லை! தமிழின் தனிச்
சிறப்பிதுவே எனப்பேசும் சிறுமைஇனி வேண்டாமே!
(பூந்தழல் பக்.12)

இந்த வரிகளின் வழி கவிஞர் பிரமொழிக்கு இல்லாத சிறப்புகள் நிறையவே தமிழுக்கு உள்ளது என்று கூறியுள்ளார். ழகர ஒலிச் சிறப்புச் சிறியது நம் தமிழ்மொழி அறிவியலின் வழி நின்றாலும் மொழி வாழும் என்று குறிப்பிட்டுள்ளார்.

அதோடு அந்த அடிகளில் ,

செகம்போற்றும் கணினியிலே செந்தமிழை இயல்பாக்கிச்
சிகரத்தில் தமிழ்நிற்கச் செயலசெய்து நிலைபெறுவீர் !
(பூந்தழல் பக்.12)

கலைகளெலாம் கணினிவழி
கற்பதற்கோர் வழிசெய்து
நிலவுலகில் நம்கலைகள்
நிலைத்திருக்க வழிக்காண்பீர்!
(பூந்தழல் பக். 3)

இன்றைய கணினி உலகத்தில் நம் மொழியைக் கணினியில் புகுத்க்ச் சிகரத்தில் நிற்க செய்துள்ளனர். இது தமிழ்மொழிக்குக் கிடைத்த பெருமையாகும் என்று கவிஞர் கவிதையில் பாடியுள்ளார்.

அடுத்து, சிறப்பாகக் கவிஞர் திருக்குறளைப் பற்றி எழுதியுள்ளார்.

ஒருக்குறள் உள்ளம் உணர்ந்துகற் றாலும்
திருக்குறள் மேன்மை தெரியும்! - அருந்தமிழ்
கற்றவரும் மற்றவரும் கைத்தொழில் செய்திடும்
நற்றமிழ் நூலாது நாடு!
(பூந்தழல் பக். 16)

தமிழில் உள்ள திருக்குறளைக் கற்றால் அதன் மேன்மை தெரியும். திருக்குறளின் மகிமையை ஒட்டி இந்தக் கவிதையைப் புனைந்துள்ளார் கவிஞர்.

கவிஞர் சங்கத் தமிழ் எனும் கவிதையில் தமிழ் மொழியின் இலக்கியத்தின் சிறப்பைப் பற்றி எழுதியுள்ளார்.

பத்துப்பாட் டிலக்கியமும் பைந்தமிழ்எட் டுத்ததொகையும்
ஒத்துப்போம் உலகத்தின் ஒப்பற்ற இலக்கியமாம்!
(பூந்தழல் பக். 25)

இலக்கியத்தின் பத்துப் பாட்டும் எட்டுத்தொகையும் தமிழ்மொழியின் ஒப்பற்ற இலக்கியம் என்று கவிஞர் குறிப்பிட்டுள்ளார்.

**தமிழ் கற்றவர்கள்**

தமிழைக் கற்றவர்கள் பலர். அதனைப்பற்றி கவிஞர் கவிதைகளில் எழுதியுள்ளார்.

இமிழ்கடல் சூழந்த மண்ணில்
இன்தமிழ் கற்ற பல்லோர்
அமிழ்தசெந் தமிழ்போல் வாழ்தல்
அறிவிலார் அறியார் போலும்?
(பூந்தழல், பக். 8)

இந்த மண்ணில் தமிழ் கற்றவர்கள் அதிகம் அதோடு தமிழ் கற்பதால் மிகச் சிறப்பான வாழ்க்கை அமைவதாகக் கவிஞர் கூறியுள்ளார்.

**தமிழ் மொழி தேன்மணக்கும்**

தொடர்ந்து, கவிஞர் இந்தக் கவிதைத் தொகுப்பில் மொழியைப் பற்றி இன்னும் சிறப்பாகப் பாடியுள்ளார்.

வெறுப்பினை விட்டு விழைந்து படித்தால்
நருந்தமிழ்த் தேன்மணக்கும் நாடு!
(பூந்தழல் பக். 5)

இந்த வரிகளில் கவிஞர் நாம் என்றும் வெறுப்பு இல்லாமல் விழைந்து தமிழைப் படிக்க வேண்டும். அப்படி செய்தால் நறுந்தமிழ் மொழி நமக்கு என்றும் தேன்மணக்கும். அதனால் நாம் தமிழை நாடி செல்ல வேண்டும் என்று கவிஞர் உணர்த்துகிறார்.

## நிறைவுரை

பூந்தழல் எனும் தமிழ்க்கவிதைத் தொகுப்பை ஆராய்கையில், கவிஞர் மொழிகளுக்காக கொடுத்த முன்னுரிமையையும் அவசியத்தையும் உணர முடிந்தது. அதோடு, மொழி என்பது தாயின் மொழி அவற்றின் அவசியத்தையும் சிறப்பையும் என்றும் போற்ற வேண்டும். தமிழ் மொழி நாம் முன்னேற வழிவகுக்கிறது. கவிஞர் மொழியின் சிறப்பை ஒவ்வொரு இடத்திலும் தெளிவாக விளக்கியுள்ளார். கவிஞர் தமிழின் சிறப்பை உணர்த்த பல தருணங்களில் ஒப்பிடும் செய்துள்ளார்.

## துணைநூற்பட்டியல்


ஆசைத்தம்பி .மு (2021), பூந்தழல், உமா பதிப்பகம். கோலாலும்பூர்.

சரண் சுக்லாம் ஆதிமலிங்கம். (2021). விண்ணமுதம். விண்ணமுதன் ஆத்மலிங்கம்

சீனி நைனா முகம்மது, செ., (2014). தேன்கூடு, உங்கள் குரல் எண்டர்பிரைசு, பினாங்கு